I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.7/2023 நாள் : 12.06.2026 வா.சா.2– திரு.வேல்முருகன்.</u>

குறுக்கு விசாரணை :–

வாதி சொல்லித்தான் நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன். இந்த வழக்கைப் பற்றி வாதி சொல்லித்தான் தெரியும். வா.சா.ஆ1 ஒப்பந்தம் பற்றி எனக்குத் தெரியும். பிரதிவாதி கிரைய பத்திரம் முடிக்க வரவில்லை என்பதால் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் புல எண் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 10 செண்ட். வா.சா.ஆ1 ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. ஒப்பந்த விபரங்கள் தெரியும். வா.சா.ஆ5 கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன். பிரதிவாதி ரூ.7,50,000/– பெற்றுக் கொண்டதாக சொல்லப்படும் ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பமிடவில்லை. என் நிரூபண வாக்குமூலம் வாதி சொல்லி தயாரிக்கப்படவில்லை. நான் சொல்லி தயாரிக்கப்பட்டது. வழக்குரை சங்கதிகளை வாதி என்னிடம் சொல்லியதாக நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியிருக்கிறேன். வா.சா.ஆ1 பற்றி எனக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல. நான் அதில் சாட்சி கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.06.12 19:14:58 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.